இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 28-02-2025

# முதலமைச்சர் சொல்வதில் என்ன தவறு?

**தொ**குதி மறுசீரமைப்பை மக்கள் தொகை அடிப்படையில் செய்தால் தமிழ்நாட்டுக்கான நாடாளுமன்றத் தொகுதிகள் 39 இலிருந்து 31 ஆகக் குறையும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறினார்கள். இதற்காக மார்ச் 5 ஆம் தேதியன்று தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளின் ஆலோசனைக் கூட்டத்தை முதலமைச்சர் அவர்கள் கூட்டி இருக்கிறார்கள்.

உடனே, யார் இப்படிச் சொன்னது என்று கேட்கிறார் பா.ஜ.க. அண்ணாமலை. ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் கேட்டால் பதில் சொல்லக் கடமைப் பட்டவர்கள் பதில் சொல்ல வேண்டுமே தவிர, அண்ணாமலைக்கு என்ன வந்தது? அவர் பா.ஜ.க. மாநிலத் தலைவராக எத்தனை மாதங்களுக்கு இருக்கப் போகிறாரோ? இந்தப் பதவி பறிக்கப்பட்டால் லண்டனிலோ அல்லது வேறு ஏதாவது ஒரு 'தீவிலோ' அவர் போய் செட்டில் ஆகி விடுவார்? தொகுதிகள் குறைவதால் அவருக்கு என்ன இழப்பு? எத்தனை தொகுதிகள் இருந்தாலும் அவர் ஜெயிக்கப் போகிறவரும் இல்லை. அவருக்கு என்ன கவலை?

"சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்துங்கள்!" என்று காங்கிரசுக் கட்சித் தலைவர் ராகுல் காந்தி சொன்னபோது, அதற்கு பிரதமர் நரேந்திர மோடி சொன்ன பதில் என்ன? 2023 ஆம் ஆண்டு தெலுங்கானா மாநிலத்தில் பரப்புரை செய்ய வந்த பிரதமர் சொன்னது என்ன?

"சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தி மக்கள் தொகை அடிப்படையில் சமூகங்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என காங்கிரசுக் கட்சி சொல்கிறது. அடுத்ததாக தொகுதி மறுவரையறை நடக்க உள்ளது. காங்கிரசுக் கட்சி சொல்வதைப் போல மக்கள் தொகையின் அடிப்படையில் மக்களவைத் தொகுதிகள் மறுவரையறை செய்யப்பட்டால், தென் மாநிலங்கள் 100 தொகுதி களை இழக்க நேரிடும். தென்னிந்திய மக்கள் இதனை ஏற்பார்களா?" என்று கேட்டவர் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள்.

சாதிவாரிக் கணக்கெடுப்பை 'இந்தியா' கூட்டணி வலியுறுத்துவதால் அதற்கு பதிலடி கொடுப்பதாக நினைத்துக்கொண்டு; 2023ஆம் ஆண்டு தெலுங்கானா சட்டப்பேரவைத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் மோடி பேசிய பேச்சுக்கள், தொகுதி மறுவரையறை செய்யப்போகும் அநீதியை அவரது வாயாலேயே ஒப்புக் கொள்ள வைத்து விட்டது.

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நிசாமாபாத்தில் பேசிய பிரதமர் மோடி, 'மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை செய்யப்பட்டால், தென் இந்தியா 100 தொகுதிகள் வரை இழக்க நேரிடும்' என்று தெரிவித்தார். 'தென் இந்தியா இதனை ஏற்குமா? தென் இந்தியா காங்கிரசை மன்னிக்குமா?' என்றெல்லாம் ஆவேசமாகக் கேள்வி எழுப்பினார் பிரதமர் மோடி.

**தொகுதி மறுசீரமைப்பு என்பது நடந்தால் தமிழ்நாடு உள்பட தென் மாநிலங்களின் தொகுதிகள் குறையும் என்பது பிரதமரே ஒப்புக் கொண்ட உண்மையாகும். அதனடிப்படையில் முதலமைச்சர் கோரிக்கை வைப்பதில் என்ன தவறு இருக்க முடியும்?**

**மகளிருக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு சட்டத்தை நிறைவேற்றி விட்டதாக பா.ஜ.க. சொல்லிக் கொள்கிறது. அந்தச் சட்டத்தில் என்ன இருக்கிறது என்றால், மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்த பிறகு - அதை வைத்து தொகுதி மறுவரையறைகள் முடிந்த பிறகு - அதனடிப்படையில் 33 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்குவோம் என்று சொல்லப்பட்டுள்ளது. அப்படியானால் மக்கள் தொகைக் கணக்கெடுப்பையும், அதனடிப்படையில் தொகுதி மறுவரையறையையும் இவர்கள் செய்யப் போகிறார்கள் என்பது தெளிவாகி விட்டது. அப்படிச் செய்தால் தொகுதி எண்ணிக்கை குறையும் என்று முதலமைச்சர் சந்தேகப்படுவதில் நியாயம் இருக்கத்தானே செய்கிறது?**

அரசியல் சாசன சட்டப்பிரிவு 82 இன்படி ஒவ்வொரு முறை மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தி முடிக்கப்பட்டவுடன் ஒவ்வொரு மாநிலங்களுக்கும் ஒதுக்கப்படும் மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை மறுவரையறை செய்யப்பட வேண்டும் என்று சொல்கிறது.

நாடாளுமன்றத்தில் இயற்றப்படுகிற சட்டத்தின் மூலம் அமைக்கப்படும் தொகுதி மறுவரையறை ஆணையம், நாடாளுமன்றத்தில் இயற்றப்படும் சட்டத்தின் அடிப்படையில் தொகுதி மறுவரையறையை மேற்கொள்ள வேண்டும் என அரசியல் சாசனச் சட்டம் 82 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை மனதில் வைத்துத்தான் முதலமைச்சர் அவர்கள் கேள்வி எழுப்புகிறார்கள். இதில் தவறு என்ன இருக்க முடியும்?

2026ஆம் ஆண்டுக்குப் பின்னர் வரும் மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில்தான் தொகுதி மறுவரையறை செய்யப்பட வேண்டும் என்று 84வது சட்டத் திருத்தம் கூறுகிறது. அதன்படிதான் முதலமைச்சர் அவர்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

**இதுவரை இந்திய நாடாளுமன்றத் தொகுதிகள் 494 என்றும், பின்னர் 522 என்றும், பின்னர் 543 என்றும் மாற்றப்பட்டது எல்லாம் மக்கள் தொகையை அடிப்படையாக வைத்துத்தான். எனவே அடுத்து நடக்கப் போவதும் மக்கள் தொகையை அடிப்படையாக வைத்துத்தான் இருக்க முடியும் என்பதால்தான் முதலமைச்சர் அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்கிறார்கள். இதில் என்ன தவறு இருக்க முடியும்?**

மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்ட பின்னர்தான் தொகுதி மறுவரையறை செய்யப்பட்டு மக்களவையின் எண்ணிக்கையும் ஒவ்வொரு மாநிலத்திற்கும் அதில் உள்ள பிரதிநிதித்துவமும் தீர்மானிக்கப்பட வேண்டும் எனச் சட்டம் சொல்கிறது.

அதன்படி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை, தொகுதி மறுவரையறை செய்யப்படவில்லை ஆனால் 888 இருக்கைகளுடன் கூடிய புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தை ஏற்கனவே திறந்து விட்டார் பிரதமர் மோடி.

**தொகுதி மறுவரையறையை நடத்தி முடித்து மக்களவையில் வடமாநிலங்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்து தென் மாநிலங்களின் பிரதிநிதித்துவத்தை ஒழித்துக் கட்ட வேண்டும் என்பதுதான் ஒன்றிய பா.ஜ.க. அரசின் திட்டம் என்பது தெளிவாகிறது.**

**மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி மறுவரையறை என்பது 'தென் இந்தியாவின் தலைக்குக் கீழ் தொங்கும் கத்தி' என்று சொல்வதில் என்ன தவறு இருக்க முடியும்?**

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

கழகத் தலைவர்

# மு.க.ஸ்டாலின்

அவர்களின்

## 72வது பிறந்த நாள் நிகழ்ச்சிகள்!



**1-3-2025**

| | | |
|---|---|---|
| காலை 8.00 மணி | - | பேரறிஞர் அண்ணா நினைவிடத்தில் மலர் வளையம் வைத்தல் |
| காலை 8.00 மணி | - | முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்தல் |
| காலை 8.30 மணி | - | தந்தை பெரியார் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்தல் |
| காலை 9.00 மணி | - | அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கம் - வாழ்த்து பெறுதல் |

**- தலைமைக் கழகம்**

---

### தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் - ரூ.776.51 கோடி செலவில்

# 1064 அடுக்குமாடி குடியிருப்புகள் - அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, பிப். 28 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.2.2025) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் 659 கோடியே 96 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 1046 அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் 116 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 464 தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகள் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்.**

அதன் விவரம் வருமாறு:-

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சமூகத்திலுள்ள அனைத்து வருவாய்ப் பிரிவினர் மற்றும் அரசு ஊழியர்களுக்கு வீட்டுவசதி ஏற்படுத்தித் தருவதை தலையாய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இவ்வாரியம் சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் நிலையான வீட்டுவசதி தீர்வுகளை வழங்கி வருகிறது.

மேலும், தற்போது இவ்வாரியம் பல அடுக்குமாடி கட்டடங்கள், வணிக மற்றும் அலுவலகக் கட்டடங்கள், மறுகட்டுமானத் திட்டங்களையும் மேற்கொண்டு வருகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இது வரை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் 657.09 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 2,649 தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகை குடியிருப்புகள், 181.74 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 401 அடுக்குமாடி குடியிருப்புகள், 56.31 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 1603 மனை மேம்பாட்டு திட்டம், 117.17 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 10 வணிக வளாகங்கள், 67.32 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 7 வாரிய கோட்ட அலுவலகங்கள் மற்றும் வைப்பு நிதித் திட்டத்தின் கீழ் நகர் ஊரமைப்பு இயக்ககத்திற்கு 10.88 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 3 கோட்ட அலுவலகங்கள் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன.

**அடுக்குமாடி குடியிருப்புகள் - அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகள் திறந்து வைத்தல்**

சென்னை மாவட்டம், செனாய் நகரில் 131 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 240 அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் கலைஞர் கருணாநிதி நகரில் 51 கோடியே 29 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 120 அடுக்குமாடி குடியிருப்புகள், செங்கல்பட்டு மாவட்டம், இராஜகுளிப்பேட்டையில் 43 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 116 அடுக்குமாடி குடியிருப்புகள்;

சொந்த வீடு கட்டும் திட்டத்தின் கீழ், சென்னை மாவட்டம் நெற்குன்றத்தில் 433 கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 570 அடுக்குமாடி குடியிருப்புகள்;

தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்புத் திட்டத்தின் கீழ் திருச்சிராப்பள்ளி மாவட்டம், செங்குளத்தில் 116 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 464 அடுக்குமாடி குடியிருப்புகள்;

- என மொத்தம் 776 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

### திராவிட மாடல் நாயகன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

# கேரள மாநிலம் முழுவதும் நல உதவிகள் வழங்கி கொண்டாட்டம்!

## கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் அறிக்கை!

*திருவனந்தபுரம், பிப். 28 -*

*கேரள மாநில கழக அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*இந்தியா முழுவதும் உள்ள மாநில முதல்வர்களிலேயே முன்னணி முதல்வராக விளங்கும் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் தமிழக முதல்வர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாள் வரும் மார்ச் மாதம் 1 ஆம் தேதி உலகம் முழுவதும் தமிழர்கள் வாழ்ந்து வரும் இடங்களில் கொண்டாடப்படுகிறது.*

*அதுபோல கேரள மாநிலத்தில் உள்ள 14 மாவட்டத்திலும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா கேக் வெட்டியும் நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடப்பட உள்ளது.*

*கேரள மாநில தலைநகர் திருவனந்தபுரத்தில் மாநில அரசு தலைமைச் செயலகம் அருகில் உள்ள மாவட்ட கழக அலுவலகம் அருகில் எனது (கேரள மாநில திமுக அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன்) தலைமையில் கேரள மாநில திமுக இளைஞர் அணி அமைப்பாளர் பிரின்ஸ், மாநில தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் விபின் முருகேசன், ஹரிகுமார், திருவனந்தபுரம் மாவட்டக் கழக செயலாளர் அனீஷ், அருண், துரை பேச்சிமுத்து, அருள் ஜோதி, சுகேஷ் ஆகியோர் முன்னிலையில் இனிப்பு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடப்படுகிறது.*

*அதுபோல கொல்லம் மாவட்டம் புனலூர் தொகுதியில் மாவட்ட கழக செயலாளர் ரெஜிராஜ், மாம்பழத்துறை சலீம், ஸ்டீபன், அஜ்மல், ஷாலினி, ராணி, லால்ஜி கீதாகிருஷ்ணன், ஷாம் லால், ராஜேஷ், ஷாம் வால், சாஜி சுலைமான் , சதாசிவன் ஆசாரி ஆகியோர் முன்னிலையிலும் கோட்டயம் மாவட்டத்தில் மாத்யூ ஜான், ரபீக், இலியாஸ் ஆகியோர் முன்னிலையிலும் பாலக்காடு மாவட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் ஜாபர், அபுபக்கர், மஜுூத்,சரீஃப், மொய்து ஆகியோர் முன்னிலையிலும் திருச்சூர் மாவட்டத்தில் சதாசிவம், அஜ்மல் பாபு, அன்வர் அப்துல்லா ஆகியோர் முன்னிலையிலும் மலப்புறம் மாவட்டத்தில் ஷாஜிதா முன்னிலையிலும் கோழிக்கோடு மாவட்டத்தில் நஃப்ஸல் முன்னிலையிலும் வயநாடு மாவட்டத்தில் ஹிபூனல் பூவாது முன்னிலையிலும் இடுக்கி மாவட்டத்தில் ஜனார்த்தனன், மன்னன் ஆகியோர் முன்னிலையிலும் எர்ணாகுளம் மாவட்டத்தில் போபன் முன்னிலையிலும் பத்தனம்திட்டா மாவட்டத்தில் சந்திரன், எழில் ஆதவன் முன்னிலையிலும் நலத்திட்ட உதவிகள், இனிப்புகள் வழங்கி சிறப்பாக கொண்டாடப்படுகிறது.*

*இந்த நிகழ்ச்சியில் கேரள மாநிலம் முழுவதும் உள்ள கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணி களைச் சேர்ந்த நிர்வாகிகள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்து தர வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் கூறியுள்ளார்.*